### யாருக்காகவும் விட்டுக் கொடுக்காமல் கொள்கையை உறுதியாக கடைசிவரை கடைப்பிடித்த

# தலைவர் கலைஞரை மாணவர்கள் இன்ஸ்பிரேஷனாக கொள்ள வேண்டும்!

## வேலூர் வி.ஐ.டி.யில் நடந்த கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவில் - கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

வேலூர், ஆக. 29 -

**யாருக்காகவும் விட்டுக் கொடுக்காமல் கொள்கையை உறுதியாக கடைசிவரை கடைப்பிடித்த தலைவர் கலைஞர் அவர்களை மாணவர்கள் தங்களின் 'இன்ஸ்பிரேஷனாக கொள்ள வேண்டும்' என்று வி.ஐ.டி.யில் நடந்த விழாவில் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

'தமிழியக்கம்' , 'விஐடி பல்கலைக்கழகம்' , பாவேந்தர் பாரதிதாசன் தமிழ் மன்றம் ஒருங்கிணைத்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா ஆகஸ்டு 26 ஆம் தேதி வேலூரில் நடைபெற்றது.

இவ்விழாவில் கலந்துகொண்டு தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி சிறப்புரையாற்றினார்.

அவர் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"விஜடி பல்கலைக் கழகத்தின் வெற்றியோடு தனது வாழ்த்துகளை இணைத்துக் கொண்டவர் தலைவர் கலைஞர்.

தலைவர் கலைஞர் அவர்களிடம் நம்முடைய மரியாதைக்குரிய முரசொலி செல்வம்தான் வேந்தரை அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார்.

இந்த நாடாளுமன்றத்திலே சமாஜ்வாதி கட்சியில் நிறைய இளைஞர்கள் இளம்பெண்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். 27 வயது, 26 வயது, ஒரு பெண்ணுக்கு 25 வயது என இளைஞர்கள் எம்.பி.க்களாக வந்திருப்பதைப் பார்த்து மகிழ்ச்சியாக இருந்தது.

ஆனால் நமது விஜடி வேந்தர் அந்த காலத்திலேயே 26 வயதிலே பாராளுமன்றத்தில் அடியெடுத்து வைத்தார். அப்பேர்ப்பட்டவர் தனது அரசியல் பயணத்தை ஒரு கட்டத்தில் நிறுத்தி, கல்விப் பயணத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு... இன்று கிட்டத்தட்ட 1600 வெளிநாட்டு மாணவர்கள் உட்பட 90 ஆயிரம் மாணவர்கள் படிக்கக் கூடிய அளவுக்கு விஜடி கல்வி நிறுவனத்தை மிகப்பெரிய பல்கலைக் கழகமாக மாற்றியிருக்கிறார்.

**தூத்துக்குடியில் தொடங்கிடுக!**

கலைஞர் நூற்றாண்டு விழாவை அவர் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்திலே... போபால் உட்பட நான்கு இடங்களில் கல்வி நிறுவனங்களை நடத்திக் கொண்டிருக்கும் விஜடி வேந்தர் அவர்கள், ஐந்தாவதாக தூத்துக்குடியில் கல்வி நிறுவனத்தைத் தொடங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறேன்.

ஏனென்றால் வடக்கில் கல்வி நிறுவனங்கள் தொடங்கும்போது தெற்கிலும் தொடங்க வேண்டும் அல்லவா... நான் தமிழ்நாடு அளவில் வடக்கு தெற்கு என்று சொல்லவில்லை. அதைத் தாண்டிய நாடு தழுவிய வடக்கை பற்றி சொல்கிறேன். எனது கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்களின் அரசியல் பயணம் பற்றி, எழுத்துத் திறமை பற்று, தொண்டு பற்றி பேசுவதற்கு இந்த மேடையிலே பல பேர் இருக்கிறார்கள்.

ஆனால் கலைஞரின் மகளாக அவரை நான் பார்த்த பார்வையை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். தலைவர் கலைஞர் எனக்கு நண்பர், தத்துவ வழிகாட்டி, என் நாயகர், அப்பா. இது அத்தனையுமாக இருந்த ஒருவர்.

தலைவரோடு இருக்கக் கூடிய நேரத்தில் அதுவும் நம் பொதுச் செயலாளருக்கு நன்றாக தெரியும். அவரும் தலைவரும் ஒன்றாக இருக்கும் நேரமெல்லாம் மகிழ்ச்சி ததும்பும் நேரம். எல்லாரும் சிரித்துக் கொண்டேதான் இருப்போம். அவர் தலைவர், நாம் வயதிலே இளையவர் என்று எந்த வித்தியாசமும் இருக்காது.




**திருவிழா போல தேர்தல் பிரச்சாரம்!**

அதேபோல தலைவர் தேர்தல் பிரச்சா ரத்துக்கு செல்லும்போது அந்த வாகனத்திலே அதிகபட்சம் எத்தனை பேர் ஏற முடியுமோ அத்தனை பேர் ஏறிக் கொள்வார்கள். அதுவே ஒரு திருவிழா போல இருக்கும்.'

அவர் கூட இருக்கக் கூடிய நேரங்கள் எல்லாமே மகிழ்ச்சியான நேரம்,. இப்போதெல்லாம் தேர்தல் முடிவுகள் வரும்போது இரண்டு, மூன்று மணி நேரத்தில் டிரண்ட் தெரிந்துவிடுகிறது. ஆனால் முன்பெல்லாம் வாக்குச் சீட்டுகள் எண்ணுவதற்கு நாள் கணக்கிலே ஆகும். ஒரு கட்டத்தில் முடிவுகளின் திசை தெரியும்.

அந்த நேரத்தில் எந்த உணர்வையும் காட்டிக் கொள்ளாமல் தன்னோடு இருப்பவர்களை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும்,. தெம்பாக வைத்துக் கொள்ள வேண்டும். தைரியமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக எல்லாரையும் கிண்டல் செய்து கொண்டிருப்பார்.

ஒரு வேளை தேர்தலில் தோல்வியுற்றுவிட்டாலும், மறுநாளே வாக்களித்தவர்களுக்கு நன்றி சொல்லும் கூட்டங்களை வெற்றி பெற்றவர்களுக்கு முன்னால் போடக் கூடியவர்தான் தலைவர் கலைஞர்.

இன்று மன அழுத்தம் பற்றி பேசுகிறோம். ஏதோ ஒரு விஷயத்தை செய்து முடிக்க முடியவில்லை என்றால் தளர்ந்து போகிறோம். ஆனால் அவரது வாழ்க்கையில் அவர் பார்க்காத வெற்றிகள் இல்லை, அவர் பார்க்காத தோல்விகள் இல்லை, அவர் பார்க்காத அவமானங்கள் இல்லை.

**உடன்பிறப்புக்காக சிந்தித்த தலைவர்!**

ஆனால் எதற்குமே அவர் மனம் தளர்ந்து போனதில்லை. அப்படி எந்த காலகட்டத்திலும் நான் பார்த்ததே இல்லை., அடுத்து என்ன? இந்தத் தடையை தாண்டும் வழி என்ன? என் உடன்பிறப்புகளை இந்த தடையை தாண்ட வைத்து வெற்றி பெற்றுக் காட்டக் கூடிய வழி என்ன என்று சிந்திக்கக் கூடிய தலைவராக கலைஞர் எப்போதும் இருந்திருக்கிறார்.

இன்றைய தலைமுறையினர் இந்தப் பண்பை கலைஞரிடம் இருந்து இன்ஸ்பிரேஷனாக எடுத்துக் கொள்ள வேண்டும். நான் என்னுடைய எந்த கடினமான நேரத்திலும் அவரைத்தான் நினைத்துக் கொள்வேன்.

முதலமைச்சராக இருந்த தலைவர் நள்ளிரவில் கைது செய்யப்படுகிறார், ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனாக இழுத்துக் கொண்டு போகிறார்கள்., ஜட்ஜ் வீட்டுக்கு இழுத்துக் கொண்டு போகிறார்கள். ஜட்ஜ் வீட்டில் ஹாஸ்பிடலுக்கு கூட்டிக் கொண்டுபோக வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் போலீஸார் ஹாஸ்பிடலுக்கு கூட்டிக் கொண்டு போகவில்லை. நேராக மத்திய சிறை வாசலில் கொண்டு போய் வண்டியை நிறுத்துகிறார்கள்.

சிறை வாசலில் ரொம்ப நேரமாக வண்டி நிற்கிறது. சிறைக்குள்ளேயும் கூட்டிக்கிட்டு போகலை, மருத்துவமனைக்கும் கூட்டிக் கொண்டு போகவில்லை., வயது முதிர்ந்த ஒரு தலைவரை கடுமையாக அலைக்கழித்து சிறைவாசலில் நிறுத்தி வைத்து நீண்ட நேரம் காக்க வைத்தார்கள். அப்போதுதான் சற்று விடிய ஆரம்பித்திருந்தது.

ஒரு போலீஸ்காரர் என்னிடம், 'அம்மா... வேலூருக்கு கூட்டிட்டுப் போறதா இருக்காங்கனு நினைக்கிறேன்' என்று என்னிடம் மெதுவாக தெரிவித்தார்.

நான் உடனே தலைவரிடம், 'இங்க உங்களை இறக்கிவிட மாட்டாங்களாம்ப்பா... வேலூருக்கு கூட்டிக்கிட்டு போகப் போறதா சொல்றாங்க. இப்ப என்ன பண்றது?' என்று நான் கேட்டேன். ஒரு நிமிடம் யோசித்துவிட்டு, 'சரி இறங்கு...' என சொன்னார்.

அந்த வயதில் இரவு முழுதும் இழுத்தடிக்கப்பட்ட பிறகு அந்த தலைவன் இறங்கி அங்கேயே தரையில் அமர்ந்தார். சோர்ந்து போகவில்லை, என்னை என்ன பண்ணிவிடுவார்கள் என்று பயப்படவில்லை. தரையில் உட்கார்ந்து, 'வா என்னனு பாத்துடலாம்' என்று சொன்ன அந்த தலைவனுக்குத்தான் இன்று நூற்றாண்டு விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

**போராடி போராடி வெற்றி பெற்றவர் தலைவர்!**

வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் போராட்டம். பள்ளியில் சேர்க்க போராட்டம்... படிக்கணுமா போராட்டம்..,. ஒவ்வொரு கட்டத்திலும் போராடிப் போராடி, தான் மறைந்த பிறகு எந்த இடத்தில் தன்னை புதைக்க வேண்டும் என்பதில் கூட போராடி வெற்றி பெற்ற மனிதன் தான் தலைவர் கலைஞர்.

பொதுவாகவே அரசியல்வாதிகள் என்றால் வாக்குகளுக்காகவே திட்டங்கள் தீட்டுபவர்கள் என்ற விமர்சனங்கள் உண்டு. இன்றைக்கும் பெரும்பாலான மக்களுக்கு பயன்பட்டு வரும் பொது விநியோகத் திட்டத்தை தமிழ்நாடு அளவில் துவங்கியது தலைவர் கலைஞர் அவர்கள். அதேபோல இந்தியாவிலேயே முதல் முதலாக ஏழைகளுக்கு குடிசை மாற்று வாரியம். காவல் துறையில் பெண்களை முதலில் கொண்டுவந்த முதல் முதலமைச்சர் தலைவர்.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுத்தவர் கலைஞர். 'அவர் அன்னிக்கு இலவச மின்சாரத் திட்டம் கொண்டுவரலைன்னா விவசாயமே செஞ்சிருக்க முடியாது' என்று இன்று வரைக்கும் நினைவோடு சொல்கிறார்கள் விவசாயிகள்.

இப்படி பெரும்பான்மையான மக்கள் பயன்பெறும் திட்டங்களைக் கொண்டுவந்த தலைவர் கலைஞர், அதேநேரத்தில் யாருமே கண்டு கொள்ளாமல், வாக்கு வங்கியாக இல்லாதவர்களுக்கும் குரலாக, ஆதரவுக் கரமாக இருந்தவர்தான் தலைவர் கலைஞர்.

நான் ஒருமுறை பரனூரில் இருக்கும் தொழு நோயாளிகள் காப்பகத்துக்கு சென்றிருந்தபோது, அங்கிருந்த ஒருவர் என்னிடம், 'தலைவர் மட்டும் இல்லைன்னா நான் எங்கோ தெருவுல செத்துக் கிடந்திருப்பேன். என்னை குடும்பத்துலயே துரத்தி விட்டுட்டாங்க. அவர்தான் எங்களுக்கு ஒரு காப்பகம் உருவாக்கினார். எங்களைப் பத்தி வேறு யாரு யோசிச்சா?' என்று சொன்னார்.

**தொழு நோயாளிகளுக்கான கவலைப்பட்ட கலைஞர்!**

அன்றுதான் எவ்வளவு பெரிய மனிதனுக்கு மகளாக பிறந்திருக்கிறேன் என்று முழுமையாக நான் உணர்ந்தேன். இந்த சமூகத்தில் அவர்கள் ஓட்டு போட்டுதான் அவர் முதலமைச்சராக வேண்டும் என்றில்லை. அவர்களுக்கு செய்யலைன்னா ஏன் செய்யலைனு யாரும் கேள்வி கேட்கப் போறதில்ல. இந்த சமூகத்தில் புரட்சியை கொண்டுவந்துவிடும் அளவுக்கு அவர்கள் பெரும்பான்மையினர் இல்லை. ஆனால் யாரும் கவலைப்படாத அந்த சிறிய குழுவினருக்காக கவலைப்பட்டவர்தான் தலைவர் கலைஞர்.

அதேபோல மாற்றுத் திறனாளிகளுக்கு மாற்றுத் திறனாளிகள் என்று பெயர் வைத்து, ஒரே நாளில் அவர்கள் போராட்டத்தின் பெரும்பாலான கோரிக்கைகளை நிறைவேற்றியவர் தலைவர் கலைஞர். லைட் ஹவுஸில் இருந்து தலைமைச் செயலகத்துக்கு அவர்கள் வரும் வரை காத்திருந்து அதிகாரிகளை எல்லாம் வரச் சொல்லி மாற்றுத் திறனாளிகளின் பல நாள் கோரிக்கைகளை பத்தே நிமிடத்தில் நிறைவேற்றித் தந்தவர் தலைவர் கலைஞர்.

அதுபோல இந்த சமூகத்தில் மிக கொச்சையாக இகழப்படக் கூடிய, குடும்பங்களே தூக்கி எறியக் கூடிய திருநங்கைகளுக்கு திருநங்கைகள் என்று பெயர் வைத்து., அவர்களுக்கு என்று வாரியத்தை உருவாக்கி... இந்தியாவிலேயே அவர்களுக்கு அங்கீகாரத்தை அளித்தவர் தலைவர் கலைஞர்.

அவர்களுக்கு ரேஷன் கடை, பாஸ்போர்ட், கல்லூரியில் படிக்கும் வாய்ப்பு எல்லாவற்றையும் உருவாக்கி இந்தியாவிலேயே முதல் முறையாக மூன்றாம் பாலினத்துக்காக அங்கீகாரம் அளித்தவர் தலைவர் கலைஞர்.

இங்கே நிறைய பெண்கள் இருக்கிறீர்கள். முன்பெல்லாம் கிராமங்களில் பெண்களை அவ்வளவாக படிக்க அனுப்ப மாட்டார்கள். தலைவர் கலைஞர். 'முதல்ல இந்த பிள்ளைகள் எட்டாவது வரைக்கும் படிக்கணும்' என்று சொல்லி எட்டாவது வரை படித்தால் திருமண உதவித் தொகை என்ற திட்டம் பற்றி ஆலோசித்தார். அதன் பின் அது பத்தாவது என ஆக்கப்பட்டது.

அப்போது அதிகாரிகள், 'எதற்காக எட்டாவது படித்தவர்களுக்குனு ஒரு நிபந்தனை வைக்கணும்? திருமண உதவித் தொகை என்றாலே பெண்கள் எல்லாரும் நமக்கு ஓட்டு போடுவாங்க' என்று சொல்லியிருக்கிறார்கள்.

**மகளிர்க்காக - கலைஞர் உருவாக்கிய திட்டம்!**

அதற்கு தலைவர் கலைஞர், 'இந்தத் திட்டம் என்பது தமிழ்நாட்டில் இருக்கும் பெண்கள் அனைவரும் குறைந்தபட்சம் எட்டாவது வரைக்கும் படிக்க வேண்டும் என்பதற்கான திட்டம். ஓட்டுக்கான திட்டம் இல்லை. பத்தாவது வரைக்கும் ஒரு பெண் படித்துவிட்டால் அந்த பெண் பிளஸ்டூ வரைக்கும் படித்து விடுவாள். அதன் பின் அவள் கல்லூரிக்கு படிக்க அரசே உதவி செய்யும்' என்று சொன்னார் தலைவர் கலைஞர்.

இன்று பெண் பிள்ளைகள் படிப்பதை யாரும் தடுத்து நிறுத்த முடியாது என்ற நிலை உருவாகிவிட்டது. இன்று முதலமைச்சர் தளபதி அவர்கள் கல்லூரிக்குச் செல்லும் பெண்களுக்காக மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிக் கொண்டிருக்கிறார்.

ஒரு தலைவருக்கு உரிய உயர்ந்த பண்பு எது வென்றால் மன்னிக்க கற்றுக் கொள்ள வேண்டும். உலகத்தில் யாரும் எல்லா விதத்திலும் முழுமை பெற்றவர்களாக இருக்க முடியாது. பல பேர் அதை கருத்தில் கொண்டு மன்னிக்காமல் இருப்பதால் பல உறவுகள் விரிசல் விட்டுவிடும்.

ஆனால் தலைவர் கலைஞர் தன்னுடைய நண்பர்களை அவர் எந்த காலத்திலும் விட்டுக் கொடுக்க மாட்டார். இன்றைக்கு ஒரு தப்பு பண்ணியிருந்தால் கூட, அவர் என்றைக்கோ செய்த நன்மைகளை நினைத்துப் பார்ப்பார். கட்சி கஷ்டப்பட்ட நிலையில் கூட இருந்த ஆள், அதனால், இன்று தப்பு பண்ணினால் கூட பரவாயில்லை விடு என்று மன்னிக்கக் கூடிய தவறுகளோடு சேர்த்து மனிதர்களை நேசிக்கக் கூடிய தலைவர் கலைஞர். இதற்கு பல உதாரணங்களைச் சொல்ல முடியும்.

ஒரு முறை அறிவாலயத்தில் தலைவருடன் நான் இருந்தேன். தலைவரைப் பார்க்க நிறைய பேர் வந்துகொண்டிருந்தனர். அப்போது தலைவர் முதலமைச்சர். அவரைப் பார்க்க அழுக்கான முக்கால் வேட்டி கட்டிக் கொண்டு ஒருவர் வந்தார். அவர் தலைவரைப் பார்த்து, 'என்ன... என்னை உனக்கு ஞாபகம் இருக்கா? எப்படி ஞாபகம் இருக்கும்?' என்று கேட்டார். அப்போது தலைவர் உடனே, 'ஏன் ஞாபகம் இல்லை... போன வாரம் உங்க ஊருக்கு நான் கூட்டத்துக்கு வந்தேன். அங்க உன்னை தேடித் தேடி பார்த்தெனே? நீ இல்லையே' என்று சொன்னார் தலைவர்.

அப்போது அந்த மனிதர் அப்படியே ஆடிவிட்டார். 'இல்ல... நீ ஊருக்கு வந்தப்ப நான் ஊர்ல இருக்க முடியல. என் மகளோட மாமியார் இறந்துட்டாங்க. அதனால தான் உன்னை பார்க்க முடியலை. அதான் இப்ப கிளம்பி இங்க வந்தேன்' என்று சொன்னார் அவர்.

**உடன் பிறப்புகளை உயிராய் நேசித்தார்!**

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் கட்சியில் தன்னோடு பணியாற்றிய ஓர் ஒன்றிய செயலாளரை நினைவில் வைத்துக் கொண்டு முதலமைச்சர் இப்படி பேசுகிறார் என்றால்... தன் கட்சியினரை உடன் பிறப்புகளை எந்த அளவுக்கு நேசித்தார் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞருக்கு பயம் என்றால் என்னவென்று தெரியாது. அவர் எப்போதும் சொல்வது 'உறவுக்கு கை கொடுப்போம், உரிமைக்கு குரல் கொடுப்போம்'. அது ஒன்றிய அரசாக இருந்தாலும் தேவை, அவசியம், நியாயம் என்று இருக்கும் வரை கை கொடுப்போம். அதை மீறி அவர்கள் நடந்துகொண்டால் உறவை முறித்துக் கொண்டு குரல் கொடுப்போம் என்ற மனிதர் இருந்தார் என்றால் அவர் தலைவர் கலைஞர்தான்.

எமர்ஜென்சி நேரத்தில் கொஞ்சம் விட்டுக் கொடுத்து கொஞ்சம் அனுசரித்துப் போயிருந்தால் ஆட்சி தொடர்ந்திருக்கும். ஆனால் அந்த நேரத்தில் இந்த நாட்டின் ஜனநாயகத்தை காப்பது எனது கடமை என்று... தனது மகனை சிறையில் அடைத்தாலும் தன் கட்சியினரை சிறையில் அடைத்தாலும் ஜனநாயகத்தை காப்பது கடமை என்று குரல் கொடுத்து தன் ஆட்சியை இழந்தவர் தலைவர் கலைஞர்.

தன் கொள்கைகளை எந்த காலத்திலும் யாருக்காகவும் விட்டுக் கொடுக்காதவர் தலைவர் கலைஞர். அதனால்தான் தனி மனிதனாக அண்ணாசாலையில் போய் பிட் நோட்டீஸ் கொடுத்து நின்றார் என்றால் அந்த தைரியம் தான், கொள்கை உறுதியும்தான்.

அந்த கொள்கை உறுதியை கடைசி வரை கடைப்பிடித்த தலைவர் கலைஞரைத்தான் நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட தலைவரைதான் நாம் கொண்டாடுவோம்."

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

இந்நிகழ்வில் கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன், அமைச்சர் ஆர். காந்தி, முரசொலி செல்வம், கவிப்பேரரசு வைரமுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், மற்றும் வி.ஐ.டி பல்கலைக்கழக வேந்தர் கோ.விசுவநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்ட கடலோர மீனவ கிராமங்களைச் சேர்ந்த 1610 மீனவர்கள் அ.தி.மு.க., வெற்றிக் கழகம், அ.ம.மு.க., தே.மு.தி.க., கட்சிகளில் இருந்து விலகி தி.மு.க.வில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் ஆகியோர் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து மற்றும் பலர் உள்ளனர்.



அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கல்லாத்தூர் ஊராட்சியில் கல்லாத்தூர் முதல் கல்லேரி, இருதயபுரம், சலுப்பை வரை தார் சாலை அமைக்கும் பணியினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.